# இலங்கையின் எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சி



மின்வலு சக்தி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்
# எண்ணெய் எரிவாயு
# அகழ் ஆராய்ச்சி

**மின்சக்தி எரிபொருள் அமைச்சு**

80, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை
கொழும்பு - 07, இலங்கை
தொ.பே.: 94-1-564363
ஃபக்ஸ்: 94-1-564474
ஈமெயில்: pepland@eureka.lk
09 ஜூலை 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சி

## பொதுவான சுருக்க விவரணம்

தேசிய அபிவிருத்தியிலுள்ள சக்தித் துறையின் முக்கிய பங்களிப்பும் பெற்றோலிய இறக்குமதியின் அதிகரித்துச் செல்லும் ஆகுசெலவும் சக்திப் பராமரிப்புப் பிரிவை உள்நாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் கண்டுபிடிப்பு ஆற்றலை ஆராயச் செய்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி மூல தொழில்நுட்ப உதவியுடன் கூடிய கருத்திட்டமொன்று வகுத்தமைக்கப் பட்டு நாட்டில் காணப்படும் எண்ணெய் எரிவாயு ஆராய்ச்சிச் செயற்பாடுகளைப் புத்துயிர்ப்பிக்கும் பொருட்டு நிறைவேற்றப்பட்டது. இவை, 1980இன் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமற்ற அகழ் ஆய்வு கைவிடப்பட்ட வேளையில் முடங்கிக் காணப்பட்ட செயற்பாடுகளாகும். எமது கடற்பரப்பை மிக அண்மித்துக் காணப்படும் இந்திய கடலோரப்பகுதி தொடர்பில் புதிய தொழில்நுட்ப அபிவிருத்திகளைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட தரவுகள் எமது நீர்ப்பரப்புகளிலும் நீரக நிலக்கரி ஒதுங்கிக் கிடக்குமிடங்கள் இருப்பதை வலிமையாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. புவியியல் அறிவுத் திறன் பயனை விருத்தி செய்யும் பொருட்டு அத்தரவுகள் இதற்கு முன்னர் ஒரு போதுமில்லாதவாறு பொரும் வாய்ப்பொன்றைக் காட்டித் தந்துள்ளன. இன்னும் விசேடமாக ஆபத்துக்களுக்காளாகும் தனியார் துறை முதலீட்டாளர்களின் நலனை மேம்படுத்துமுகமாக சட்ட தொழில் நுட்ப அரசிறை நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்ற பரந்தவொரு சட்ட வரையறையும் சிபாரிசு செய்யப்பட்டு சட்டக் குறிப்பு வரையப்பட்டுள்ளது. பெற்றோலிய வளச் சட்ட மசோதா, அதாவது இந்நோக்கத்திற்காக வரையப்பட்ட முக்கிய சட்டவாக்கல் விடயமும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படவுள்ளது.

கருத்திட்டத்தை நிறைவேற்ற தயாரிக்கப்பட்ட நிருவாக அமைப்பு முறையானது பாராளுமன்றத்தில் உள்ள சட்ட வழி வகையைப் பின்பற்றும், சட்ட வரையறை அந்தஸ்த்துப் பெற்றவுடன் முதலீட்டாளர்களை ஈர்க்கும் பொருட்டும் மற்றும் பெற்றோலிய வளங்கள் கண்டுபிடிப்பு ஆராய்ச்சிக்கான நிலத் துண்டுகளை வழங்குமுகமான கேள்விச் சுற்றை ஆரம்பிக்கும் பொருட்டும் கொழும்பில் வேலையரங்கொன்று நடாத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் குறிக்கோள்

இலங்கைக் கரையோரப் பகுதிகளுக்கு இதற்கு முன்னர் ஒரு போதுமில்லாதவாறு கிடைத்திருக்கும் புவியியல் அறிவுத் திறன் வாய்ப்பைக் கொண்டு இலங்கைக் கடலோரப் பிரதேசங்களில் எண்ணெய் எரிவாயு அகழ் வாய்ப்பைக் கண்டுபிடிப்பதும் அத்துடன் சிறந்த வளங்கள் மற்றும் சூழல் முகாமை மூலம் எண்ணெய் எரிவாயு அபிவிருத்தியிலிருந்து மிகச் சாத்தியமான பெறுமானங்களை உருவாக்குவதும் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

## பின்னணி - வலுவும் பொருளாதாரமும்

சக்தித் துறையின் முக்கியத்துவம் விசேடமாக, நீரக நிலக்கரிப் பிரிவு பல்வேறு காரணங்களால் மிகையாகக் கூறமுடியாதுள்ளது. அவற்றுள் அதிகரித்துச் செல்லும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்கான உயர் மட்ட சர்வதேச விலைகளும் மிக மேலாகக் காணப்படுகின்றன. மொத்த மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிகள் ஆண்டொன்றுக்கு 8 வீதத்தால் உயர்வடைகின்றன. அத்துடன் நாட்டின் இன்றைய மொத்த இறக்குமதிகள் 10 வீதமாகும். கடந்த இரண்டு வருடங்களாக நிலவி வரும் எண்ணெய்க்கான சர்வதேச விலைகளின் உயர்வு காரணமாக எண்ணெய் இறக்குமதிகள் கணிசமானளவு அந்நியச் செலாவாணியைத் தோற்றுவித்துள்ளன. இன்னொரு வகையில் கூறுவதானால், தேயிலை மற்றும் பிற பொருட்கள் ஏற்றுமதி இன்னும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு போன்ற வழிகளில் ஈட்டிய வருமானம் உள்ளூர் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு சிறந்த பயனைப் பெறத் தேவையான எண்ணெய் இறக்குமதிச் செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்படுகின்றது. ஏனென்றால், உள்ளூர் எண்ணெய் வளங்கள் இல்லாததால் நாடு முழுமையாக எண்ணெய் இறக்குமதியில் தங்கியிருக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் இப்பிரச்சினையை இலகுவாக்க ஏதாவது தணிப்பு வழிகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். ஏனென்றால் மிக அதிகமாக வளர்ந்துள்ள எதிர்பார்ப்புகள் அதிகளவான சக்தி நுகர்வைத் தேவைப்படுத்துகின்றன.

இன்றைய நிலையில் எண்ணெய் விலைகளைப் பேணுவதற்கான பிரதான எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் தீர்மானம் இறக்குமதியில் தங்கியிருக்கும் எமது பொருளாதாரத்தை மேலும் பாதிக்கக்கூடியளவுக்கு சர்வதேச விலை விநியோகங்களில் ஏற்றத்தாழ்வைத் தோற்றுவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் எதிர்கால நோக்கம் எதிர்பார்த்தது போல் சிறப்பாக விருக்கமாட்டாது.

தற்போதைய மின் உற்பத்தி நிலைமை இப்பிரச்சினையை மேலும் உக்கிரமடையச் செய்யலாம். வருடத்திற்கு 8 வீதம் அதிகரிக்கும் மின்சாரத்திற்கான கேள்வியை எதிர்கொள்ளும் பொருட்டு அனல் மின் உற்பத்தியைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கின்ற மேல் கொத்மலை நீர் மின்சார உற்பத்திச் செயற்றிட்டப் பூர்த்தியின் பின் நீர் மின் உற்பத்தியின் பூர்த்தித் தன்மையை இலங்கை அடையலாமென நிபுணர்கள் உறுதி செய்கின்றனர்.

உள்ளூர் எண்ணெய் எரிவாயு வளங்கள் அகழ் கண்டுபிடிக்கும் சாத்தியக் கூறுகளை ஆராயும் பொருட்டு உறுதியான நியாயப்படுத்துகையை இப்பத்திரத்தில் சுருக்கமாகக் கையாளப்பட்டிருக்கும் விடயம் ஏற்பாடு செய்கின்றது. நவீன முறைகள் மற்றும் நவீன இயந்திரங்களுடன் கூடிய தொழில்நுட்பத் துறையில் காணப்படும் முன்னேற்றங்கள் நீரக நிலக்கரி ஒதுங்கிக் கிடக்குமிடங்களை கண்டுபிடிக்க உதவுகின்றன. அத்துடன் எமது கடற்பரப்புக்குச் சில கிலோ மீற்றருக்கு அப்பால் மேற்கொள்ளப்படுகின்ற இந்திய எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுடன் ஒன்றிணையும் இத்தொழில்நுட்ப முன்னேற்றங்கள் எமது நாட்டு எல்லைகளுக்குள் காணப்படும் நீரக நிலக்கரி ஒதுங்கிக் கிடக்குமிடங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளைப் புத்துயிர்ப்பிக்கச் செய்ய எம்மைத் தூண்டுகின்றது.

## எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சியின் வரலாறு

முழுப் பிராந்தியத்தையும் நோக்கும் போது அதாவது, இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்கு நீரிணையை அண்டிய பகுதி புவியியல் ரீதியாக காவேரி ஆற்றுப் பள்ளத்தாக்கு என்றழைக்கப்படுகின்ற காவேரி ஆற்றுப்படுகையில் காணப்படுகின்ற நீரக நிலக்கரி அகழ் வாய்ப்பு முயற்சிகளை இந்தியா 1954இற்கும் முன்பு ஆரம்பித்திருந்தது. அத்துடன் அன்றிலிருந்து இன்று வரை நூற்றுக்கும் மேலான ஆய்வுக் கிணறுகள் அகழப்பட்டுள்ளன. காவேரி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்து காணப்படும் வர்த்தகரீதியாகச் சுரண்டக்கூடிய நீரக நிலக்கரி ஒதுங்கிக் கிடக்குமிடங்கள் மூலம் அந்நிலக்கரியுடன் இணைந்த 180,000 கன மீற்றர் கொள்ளளவுக்கும் அதிகமான நாளாந்த உற்பத்தியுடன் கூடிய வருடத்திற்கு 3 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தியை அம்முயற்சிகள் பெற்றுக் கொடுத்துள்ளன. 2000ஆம் ஆண்டில் இலங்கைக்கு மிக அண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் கரையோர அண்மிய களங்களொன்றிலிருந்து நாளொன்றுக்கு 10,000 பீப்பாய்கள் வீதம் உற்பத்தியை மேற்கொண்டது. மேலும் அதே காவேரி ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளின் கரையோர மற்றும் அதற்கு அப்பாலுள்ள பகுதிகளில் காணப்படும் பல பிற எண்ணெய் எரிவாயுக் களங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவ்வாய்ப்புகளை நெருங்கிய எதிர்கால அபிவிருத்திக்காக இந்தியா ஒதுக்கி வைத்துமுள்ளது.

1970இன் இறுதிப் பகுதி மற்றும் 1980இன் ஆரம்ப காலப் பகுதிகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மன்னார் குடா ஆற்றுப் படுகையிலும் அதை அண்மித்தவிடங்களிலும் நகர சேவைகளின் ஒத்துழைப்புடன் 7 ஆய்வுக் கிணறுகளை அகழ்ந்து எண்ணெய் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு முயற்சிகளை ஆரம்பித்தது. அக்கிணறுகள் எல்லாமே வெறுமையாகக் காணப்பட்டன. ஆகையால் அதன் பின்னர் மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், எமது நிலப்பரப்புக்கு மிக அண்மையில் அமைந்து காணப்படும் இந்தியா அதன் முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது. அத்துடன் அம்முயற்சிகளின் பயனாக 30 இற்கும் அதிகமான வெற்றுக் கிணறுகளை அகழ்ந்ததன் பின்பு இந்தியா எண்ணெய்க் கசிவைக் கண்டுபிடித்த வேளை இலங்கையானது 2000ஆம் ஆண்டில் அம்முயற்சிகள் புத்துயிர்ப் பெறும் வரையில் அதன் எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சிச் செயற்பாடுகளில் முடங்கிக் காணப்பட்டது.

## எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் மறுமலர்ச்சி

நாட்டிலுள்ள எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சியில் தனியார் துறை முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கி ஈடுபடுத்திய அவுஸ்திரேலியாவின் நிவ் சவுத் க்லோபல் தனியார் நிறுவன உசாத்துணைக் குழுவொன்று ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய தொழில்நுட்ப உதவியுடன் தற்போதிருக்கும் புவியியல் தரவு மற்றும் சட்டவாக்கல் மீளாய்வை 2001ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. ஏறத்தாள 1.5 தசாப்தங்களாக முடங்கிக் காணப்பட்ட ஆராய்ச்சி செயற்பாடுகளின் மறுமலர்ச்சியை இது பிரதிபலித்துக் காட்டுகின்றது.

நாட்டின் எண்ணெய் எரிவாயு அகழ் கண்டுபிடிப்பு புவியியல் அறிவுத் திறனை மதிப்பீடு செய்யத் தயாரிக்கப்பட்டிருக்கும் புவியியல் தரவுகள் போதுமானதாகவில்லை என உசாத்துணைக் குழு கண்டது. அத்துடன் இரு பிரதான வண்டல் மண் கொண்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுகப்படும் மேற்குக் கடலோரத்தை அண்மிய பூகோள ஆய்வுகள் நடாத்துதலையும் அங்கீகரித்தது. அதாவது இப்பகுதிகளாவன மன்னார் குடாவும் காவேரிப் பகுதியுமாகும். ஆகுசெலவு மீளப் பெறல் அடங்காத அடிப்படையிலான பூகோளத் தரவுகள் தாங்கிய 2D கப்பலைப் பெற்றுக் கொள்ள நோர்வே நாட்டு ஜியோ பிசிகல் கம்பனியுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் TGS- NOPEC என்ற ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. முதலாவது கட்டப் பகுதியில் மேற்குக் கடலோரத்தை அண்மிய நீரக நிலக்கரி அகழ் கண்டுபிடிப்புக்கான பெரும் வாய்ப்பைச் சுட்டிக் காட்டுகின்ற 1000 கிலோ மீற்றர் கடலோர நிலப் பரப்பை அவை பெற்றுக் கொண்டன.

அதே நேரம், எண்ணெய் எரிவாயு அகழ் கண்டுபிடிப்புக்கான எதிர்காலப் பலனை மதிப்பீடு செய்யத் தேவையான தரவைத் திரட்டும் பொருட்டு செய்மதி ஈர்ப்பு ஆய்வுகளை மேற்கொள்ள சுவிதிஸ் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்துடனான கூட்டுடன்படிக்கையொன்றை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செய்து கொண்டது. அத்துடன் தரவு உத்தரவாதப்படுத்தல் மூல ஆகுசெலவு மீளப் பெறும் அடிப்படையில் இலங்கையிலும், இலங்கையைச் சூழவும் ஏதாவது நீரக நிலக்கரி ஒதுங்கிக் கிடக்குமிடங்களைக் கண்டு கொள்வதற்கு வர்த்தகரீதியாகக் கிடைக்கக் கூடிய செய்மதிப் படங்களை உபயோகித்து ஈர்ப்பு ஆய்வுகளை மேற்கொள்ளும் பெற்றோஸ்கன் என்றழைக்கப்படும் சுவிதிஸ் கம்பனி ஒன்றுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் சுவிதிஸ் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையமும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டன.

புவியியல் அறிவுத் திறனை மதிப்பிடும் நோக்குடன்கூடிய புவியியல் தரவு மீளாய்வைத் தவிர, நிவ் சவுத் க்லோபல் நிறுவன உசாத்துநர்களும் நாட்டின் பெற்றோலிய அகழ் ஆராய்ச்சி சட்டவாக்கல் மீளாய்வுப் பணியை மேற்கொள்ள ஈடுபடுத்தப்பட்டனர். நாட்டின் எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சியில் முதலீடு செய்ய தனியார் துறையினரை ஊக்குவிக்க எண்ணெய் அகழ் ஆராய்ச்சி ஏற்பாடுகளை உள்ளடக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் மிகப் போதுமானதாகவில்லையென காணப்பட்டதையடுத்து பரந்தவொரு சட்டவரையறையை முன்வைக்க எமக்கு உதவும் சட்ட ஆவணத் தொகுப்பொன்றும் வரையப்பட்டு வழங்கப் பட்டிருக்கின்றது.

நாட்டிலுள்ள ஆகவுயர்ந்த பெற்றோலிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதலீடு செய்ய விருப்பமாகவுள்ள சர்வதேச எண்ணெய்க் கம்பனிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்க்கும் பொருட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்து நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு உதவவும் இந்த உசாத்துநர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

## எதிர்காலப் பயன் எல்லை

நாட்டின் மேற்குக் கடலோரப் பரப்புகளுக்கருகாமையில் காணப்படும் எண்ணெய் எரிவாயு அகழ் கண்டுபிடிப்புக்கான வாய்ப்புகள் மிக அதிகமாகவுள்ளனவென இரு கம்பனிகளான அதாவது, TGS-NOPEC பெற்றோஸ்கன் ஆகியவற்றின் புவியியலாளர்களும் நிவ் சவுத் க்லோபல் உசாத்துணை நிறுவனக் குழு உறுப்பினர்களும், புதிதாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுத் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன என அவர்கள் கருத்தொருமைப்படுகின்றனர். அவர்களின் கருத்துப்படி, இரு கடலோரங்களையும் அண்மிய பிராந்தியங்களில் பெற்றோலிய வாய்ப்பு அதிகமாகக் காண்படுகின்றதென்பதாகும். அதாவது ஆதிகாலக் குடியேற்றங்களுடன் சம்பந்தப்படுகின்ற காவேரி மற்றும் மன்னார் குடா ஆற்றுப் பள்ளத்தாக்குகளே இவைகள். எண்ணெய் எரிவாயு கொள்ளத் தேவையான அடிப்படைப் புவியியலமைப்புக்களை காவேரி ஆற்றுப்படுகை கொண்டுள்ளது என ஆய்வுகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. இன்னும் அதையண்டி இடிந்து காணப்படும் முக்கியவிடங்களிலும் எண்ணெய் எரிவாயு இருக்கின்றதென அந்த ஆய்வுகள் மேலும் சுட்டிக்காட்டுவதுடன் அங்கு 10-50 மில்லியன் பீப்பாய்கள் அளவுடைய நிலக்கரி அகழும் வாய்ப்புகள் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றன. அத்துடன் சிதைவடைந்த தேவைக்கதிகமான ஸ்ட்ராகிராபைட் காணப்படும் புவியியலப்பையும் இந்த மன்னார் குடா ஆற்றுப்படுகை கொண்டிருப்பதாக ஆய்வுகள் காட்டித் தருகின்றன. அது 100 மில்லியன் பீப்பாய் அளவு நிலக்கரி அகழ் வாய்ப்பையும் கொண்டிருக்கலாம்.

## பிரச்சினைகள்

### ஆராய்ச்சியில்

முன்பு குறிப்பிட்டவாறு 7 ஆய்வுக் கிணறுகளும் வெறுமையாகக் காணப்பட்டதன் பின்பு 1985இல் கைவிடப்பட்ட எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சிச் செயற்பாடுகள் முடங்கிக் கிடந்துள்ளன. உதாரணமாக, அகழப்பட்ட 10 கிணறுகளிலும் ஒன்றேயொன்று மாத்திரம் எண்ணெய் கொண்டதாகக் காணப்பட்டது. ஆகவே இலங்கை மிக மோசமான அகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலிருக்கின்றது என்பதை இது கருதுவதுடன் முழுமையான பெற்றோலிய வாய்ப்புக்கான அதிக முதலீடுகள் தேவை என்பதையும் கருதுகின்றது. பெற்றோலியம் ஒதுங்கிக் கிடக்குமிடங்கள் அகழ் கண்டுபிடிப்பு அறிவானது அதிகளவான கிணறுகளை அகழ்வதும் எண்ணெய் எரிவாயு ஒதுங்கிக் கிடக்குமிடங்களைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பைக் காண்பதுமாகும்.

## நீராழம்

200 மீற்றருக்குக் குறைவான நீராழத்தைக் கொண்ட காவேரி ஆற்றுப்படுகையிலேயே இந்த எண்ணெய் அகழ் ஆராய்ச்சிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் 2500 மீற்றர் நீராழத்திலும் கூட எண்ணெய் அகழ்ந்தெடுக்க முடியும். ஆகையால், நீராழம் காரணமாக முன்னர் கைவிடப்பட்டிருந்த மன்னார் குடா ஆற்றுப்படுகையில் இலங்கையும் அதன் அகழ் ஆராய்ச்சிச் செயற்பாடுகளை விரிவுபடுத்தலாம். அண்மையில் பெறப்பட்ட நிலவாய்வுத் தகவல் தரவுகள் இப்பகுதியில் 100 மில்லியன் பீப்பாய் அளவு கொண்ட எண்ணெய்யை அகழ்ந்தெடுக்கக்கூடிய பெரும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டுகின்றன. அத்துடன் செய்மதி சீப்ஸ் பகுப்பாய்வுகளும் கூட இப்பகுதியில் கணிசமான பெற்றோலிய வாய்ப்பிருப்பதாக உறுதி செய்கின்றன.

## நிரூபிக்கப்பட்ட நிலக்கரி ஒதுங்கியிருக்குமிடங்கள்

கைத்தொழில் அடிப்படையில் நீரக நிலக்கரி ஒதுங்கிக் கிடக்குமளவு மற்றும் அதன் வாய்ப்பு தொடர்பில் பூகோள விஞ்ஞானிகள் முடிவுகளை உறுதி செய்யலாம் என்பதை இங்கு கவனிப்பதும் முக்கியமானதாகும்.

எண்ணெய் மற்றும் எரிவாயு மேற்பரப்பிலுள்ளது என அகழ் உறுதி செய்யும் வழி தொழில்நுட்ப எண்ணக் கருக்களில் மாத்திரம்தான் உண்டு. ஆகையால், நில ஆய்வு மற்றும் பிற நுட்பங்கள் எண்ணெய் எரிவாயு அகழ் வாய்ப்பு இருப்பதை உறுதி செய்துள்ள போதிலும் எண்ணெய்க் கைத்தொழிலானது நிரூபிக்கப்படாதவிடங்களிலும் இன்னும் அதிக அபாயமான வேறுவிடங்களிலும் எண்ணெய் அகழ் ஆராய்ச்சியினை மேற்கொள்ளக் கருதுகின்றது.

## மேலதிக மூலதனப் பொறுப்புகளும் பெரும் அபாயங்களும்

கிணறுகள் அகழும் செயற்பாடானது மேலதிக முதலீட்டுப் பொறுப்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுத்துகின்றது. கடற்கரையோரத்திலேயே காணப்படும் ஆய்வுக் கிணறுகள் அகழ்தல் செலவுகள் ஏறத்தாழ 5 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் கடற்கரைக்கப்பாலுள்ள ஆய்வுக் கிணறுகள் அகழ்தல் ஆகுசெலவு ஏறத்தாழ 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையைக் கொண்டிருக்கலாம். மேலும், ஏனைய முதலீடுகளுடன் ஒப்பிடும் போது நீரக நிலக்கரி அகழ் ஆராய்ச்சிக்கான முதலீடு அதி விசேட ஆபத்துக்களைச் சுமக்கின்றது. செயற்பாடு பயனளிக்காமல் போகும் போது அகழ் ஆராய்ச்சியில் முதலிட்ட முதலீட்டாளர் அவரது முதலீட்டை இழக்க நேரிடுகின்றார்.

## எடுக்கும் காலம் நீண்டது

முதலீட்டாளர் எரிவாயு எண்ணெய் அகழ்வைக் கண்டுபிடித்தாலும் கூட ஏதாவது பணப்பாய்ச்சல் தாபிக்கப்பட முன்பு பொதுவாக எடுக்கும் காலம் ஐந்து வருடங்களுக்கும் அதிகமாகும்.

## புதிய சட்ட வரையறையைத் தயாரித்தல்

மேலே கூறப்பட்டது போன்று நீரக நிலக்கரி ஆராய்ச்சியில் முதலிடும் பொதுவான சிறப்பம்சத்தின் நோக்கம் அதிகரித்த ஊக்குவிப்புகள், மேம்படுத்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் ஒழுங்குறுத்துச் சட்டவரையறை இன்னும் முதலீட்டாளர்களின் அக்கறையைத் தூண்டும் செயற்பாடுகளிலுள்ள தெளிவான கொள்கைகள் என்பவற்றை வழங்கும் ஒரு சட்டவாக்க அரசிறைக் கொள்கையை அரசாங்கம் பின்பற்ற வேண்டும்.

இவ்விடயங்களை அடையாளப்படுத்துமுகமாக சட்ட மற்றும் அரசிறைத் துறை இரண்டையும் உள்ளடக்குகின்ற பரந்வொரு சட்டவரையறையை உசாத்துநர்கள் சிபாரிசு செய்து சட்டத்தில் அடக்கப்பட வேண்டிய பின்வருப் ஆவணங்களை முன்வைத்துள்ளனர்.

(i) பெற்றோலிய வளங்கள் சட்டம்
(ii) பெற்றோலிய வளங்கள் பராமரிப்பு ஒழுங்குவிதிகள்
(iii) இலாபக் பங்கடிப்படையிலான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை
(iv) கரையோரத்திற்கு அப்பாலுள்ள பெற்றோலிய வளங்கள் ஒழுங்கு விதிகளிலிருந்து சூழல் மாசடைதலைத் தடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோலிய வளங்கள் சட்ட மசோதா

இலங்கையில் காணப்படும் பெற்றோலிய வளங்கள் அகழ் ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து வழங்கும் மற்றும் அதே சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் இன்னும் இலங்கைப் பெற்றோலியச் சட்டத்தின் சில ஏற்பாடுகளை நீக்குவதற்கும் இப்பெற்றோலிய வளச் சட்டம் ஏற்புடையதாகக் காணப்படும்.

1961இன் 28ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், இச்சட்ட மசோதா ஏற்பாடுகள் பிரதானமாக பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கு கின்றன.

பெற்றோலிய வளச் சொத்துவம்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திக் குழுவின் பங்களிப்பும் அதன் அதிகாரங்கள் தொழிற்பாடுகளின் வரைவிலக்கணமும்

பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைகள், இட ஆராய்ச்சி அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகமொன்றை உருவாக்குதல்

அரசிறை ஏற்பாடுகள்

சர்வதேசச் சிறப்புச் செயன்முறைகளுடன்கூடிய நிரலிலுள்ள உசாத்துநர்கள் தயாரித்த இச்சட்ட நகல் சட்டமா அதிபருக்கு சட்டவரைஞர் இறுதி நகலை முன்வைக்க முன்னர் உரிய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களைப் பிரதிநிதிப்படுத்தும் அலுவலர்களைக் கொண்ட குழு மூலம் மேலும் மீளாய்வு செய்யப்பட்டது. இச்சட்ட ஏற்பாடுகள் அரசியல் யாப்புக்கு முரணானதன்று என்றும் அத்துடன் அரசியலமைப்புக்கு விதிக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தின் மூலம் ஏதேனும் தடை செய்தலுக்கோ அல்லது வரையறை செய்தலுக்கோ உட்படாதது என்றும் சட்டமா அதிபர் அதைத் தீர்மானித்துள்ளார். அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்பு தற்போது இச்சட்ட மசோதா பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்வைக்கும் முறை

கொள்கைகள் வகுத்தமைத்தல், பெற்றோலிய வள அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கம் கொண்ட திட்டங்களைத் தயாரித்தல், இட அகழ் மற்றும் எண்ணெய் வளங்கள் ஒப்பந்தங்கள் தொடர்பில் விலை மதிப்பிடும் கேள்விகளை அழைத்தல் என்பவற்றுக்குப் பொறுப்புச் சாட்டப்படும் பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவின் யாப்புக்குப் பாராளுமன்றம் ஏற்பாடு செய்து வழங்கும் இச்சட்ட மசோதாவின் வழி வகைகள் மூலம் எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கான சட்ட வரையறையின் முக்கிய அம்சங்கள் அமுலுக்கு வருமென எதிர்பார்க்கப் படுகின்றது. ஒப்பந்தக்காரர்கள் தமது செயற்பாடுகளை நிறைவேற்றும் மற்றும் கண்காணிக்கும் பொருட்டு அவர்களுக்குப் பெற்றோலிய வள அபிவிருத்திக் குழு அனுமதிப் பத்திரங்களையும் வழங்கும். தொழில்நுட்ப, நிதி மற்றும் ஏனைய விடயங்களில் ஆலோசனை வழங்கும் அலுவலர்களைக் கொண்ட செயலகமொன்று இந்தப் பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவுக்கு உதவி புரியும்.

பெற்றோலிய வளங்கள் ஒப்பந்தங்கள், செயற்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் கடற்கரைக்கப்பாலுள்ள பெற்றோலியச் செயற்பாட்டு ஒழுங்குவிதிகள் போன்ற ஏனைய சட்ட ஆவணங்கள் நகலை இந்த பெற்றோலிய வள அபிவிருத்திக் குழு தீர்மானிக்கவும் வேண்டும். இந்த ஆவணங்களுக்காகப் பெறப்பட்ட அரசாங்க அங்கீகாரத்துடன். எண்ணெய் எரிவாயு அகழ் ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கான இடங்களை வழங்குமுகமான கேள்விச் சுற்றை ஆரம்பிக்கவும் நியதி நிபந்தனைகளைப் பிரகடனப்படுத்தவும் உசாத்துநர்கள் திட்டமிட்டவாறு பெற்றோலிய வள அபிவிருத்திக் குழு கொழும்பில் மேம்படுத்தல் வேலையரங்கை நடாத்தலாம். இந்நடவடிக்கை முறை 2003ஆம் ஆண்டு முடிவடைய முன்பு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org